…egistered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5.00

# ஈழநாதம்

…E EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

…தம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 15 01 - 12 - 94 வியாழக்கிழமை ஓசை 286

## உணவு உற்பத்தி நிலையங்கள் இன்று முதல் பரிசோதனை

தமிழீழத்தில் பரவி வரும் தொற்று நோய்களை தடுக்கும் நடவடிக்கையின் ஒரு அம்சமாக விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவின் தமிழீழ சுகாதார பகுதியினர் தமிழீழ மக்களின் நலன் கருதி இன்று முதலாம் திகதி முதல் சகல உணவு உற்பத்தி, தயாரிப்பு, பதனிடும், பொதியிடும் அல்லது களஞ்சியப்படுத்தும் சகல நிலையங்களையும் பரிசோதனை செய்ய தீர்மானித்துள்ளனர். எனவே மேற்படி நிலைய உரிமையாளர்கள் சுகாதார பரிசோதகர்களுக்கு போதிய ஒத்துழைப்பு வழங்கி அவர்களின் ஆலோசனைப்படி இணங்கியொழுகி உணவு நிலையங்களின் சுகாதார தரத்தை முன்னேற்ற ஒத்துழைப்பு வழங்குமாறு விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

# …லிகள் - அரசு சமாதான பேச்சுவார்த்தை …த்தார் பண்டிகைக்கு முன் ஆரம்பமாகும்

## அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் இவ்வருட இறுதிக்குள், நத்தார் பண்டிகைக்கு முன்பாக ஆரம்பமாகுமென தகவல்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்கா நேற்று நடைபெற்ற வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.**

விசும்பாயாவில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா மேலும் தெரிவிக்கும் போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவையைக் கலந்து ஆலோசித்த பின்னரே எப்போதும் தீர்மானங்களை எடுத்து வருகின்றார். முன்னைய ஜனாதிபதி போல் எதேச்சதிகாரமாக அவர் நடந்து கொள்ளுவதில்லை.

சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான கால அட்டவணை இன்னமும் முடிவாகவில்லை. எனினும் நத்தாரிற்கு முன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சமாதானத்துக்கான தேடலை அரசாங்கம் நம்பிக்கையுடனேயே அணுகவுள்ளது.

இந்த வகையில், சமாதானப் பேச்சுக்களுக்கான ஏற்பாடுகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிக அக்கறை கொண்டிருக்கின்றார் என அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி சந்திரிகா ஏப்ரலில் இந்தியா செல்லத் திட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் புதுடில்லிக்கு விஜயம்செய்ய திட்டமிட்டிருப்பதாக இந்திய வானொலி கூறியுள்ளது.

புதுடில்லியில் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் தெற்காசிய நாடுகளின் அர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## …இராணுவ கெடுபிடி மத்தியிலும் …திருமலையில் மாவீரர் தினம்

(…கோணமலை)

… இராணுவத் … அடாவடித் தனங் …கு மத்தியிலும் தமிழீழ …ர் தினம் திருகோண …மூதூர் பகுதியிலுள்ள …கிராமங்களில் பெரும் …வெழுச்சியுடன் அனுஷ் …க்கப்பட்டது.

…தூரிலுள்ள முகத்து…, முட்டுச்சேனை, …ழத் தோட்டம், கல்லடி …கைத்துறை, பாட்டாளி…, சின்னக்குளம், தங்கபுரம் ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள்தாயக விடிவுக்காக தம்மை அர்ப்பணித்த மாவீரர்களின் நினைவாக வீதிகளை சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்திருந்தனர்.

வெருகல் பகுதியில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ள வெருகல் முகத்துவாரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தொடர்ச்சியாக ஏழு நாட்கள் மலர் வளையங்களை வைத்து மாவீரர்களை மக்கள் நினைவு கூர்ந்தனர்.

கடந்த 26-ந் திகதி பி. ப. 5 மணிக்கு பாட்டாளிபுரத்தில் மாவீரர் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது. வெருகல் பகுதியிலுள்ளபாடசாலைகளில் மாவீரர் நினைவாக கவிதை, கட்டுரைப்போட்டிகளும நடத்தப்பட்டன. கரபந்தாட்டப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.

மாவீரர் வார காலப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர், பாட்டாளிபுரம், வீரமாநகர், இலக்கந்தை ஆகிய பகுதிகளை சுற்றி வளைத்து அடாவடித்தனங்களை நடத்தினர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## …லமைப் பரிசில் முடிவுகள் நேற்றும் வரவில்லை

…. மாவட்டத்தில் கட… …கஸ்ட் மாதம் நடந்து …த ஆண்டு-5 புலமைப் … பரீட்சை முடிவுகள் …று வருமென எதிர்பார் …தபோதிலும் இறுதியில் …மாற்றத்தைக் கொடுத்துள் … படி பரீட்சை முடிவுகள் எதுவும் எடுத்துவரப்படவில்லை.

கொழும்பில் கடந்த 19-ம் திகதி இப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்தபோதிலும் யாழ். மாவட்ட பெறுபேறுகள் இதுவரை எடுத்துவரப்படாததினால் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்…

…பொ. த. சாதாரண…

# புலிகளுடன் பேசுவது குறித்து சந்திரிகாவிற்கு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

...மாவட்டத்தில் கட...கஸ்ட் மாதம் நடந்து ...ந ஆண்டு-5 புலமைப் பரீட்சை முடிவுகள் ...று வருமென எதிர்பார்...தபோதிலும் இறுதியில் ...மாற்றத்தைக் கொடுத்துள் ...

...பொ. த. சாதாரண ...க்கான வினாத்தாள் ... ...ரப்பட்ட போதிலும் மேற்படி பரீட்சை முடிவுகள் எதுவும் எடுத்துவரப்படவில்லை.

கொழும்பில் கடந்த 19-ம் திகதி இப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்தபோதிலும் யாழ். மாவட்ட பெறுபேறுகள் இதுவரை எடுத்துவரப்படாததினால் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோரும் அதிருப்தி நிலையில் காணப்படுகின்றனர். (யோ)

க. பொ. த. (சா.த.) பரீட்சை

# ஒரு பகுதி வினாத்தாள்கள் யாழ். வந்து சேர்ந்தன

(வடமராட்சி)

டிசம்பர் மாதம் 5-ம் திகதி ...ரம்பமாகும் க. பொ. த. ...தாரண தரப் பரீட்சைக்கு ...ய ஒரு கட்ட வினாத்தாள் ...ள் நேற்று யாழ் கல்வித் ...ணைக்களத்திற்கு வந்து ...சர்ந்தன.

இவ்வினாத்தாள்கள் நேற்று முன்தினம் பலாலிக்கு விமானம் மூலம் எடுத்து வரப்பட்டு பின்னர் 'குமணை' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து யாழ். வந்தடைந்தன. இரண்டாம் கட்ட வினாத்தாள்கள் அடுத்த வார முற்பகுதியில் வந்து சேரும். (யோ)

...முதுவினைஞர்கள்

# ...தவி உயர்வு பரீட்சை ...னாத்தாள்கள் வந்தன

... 3-ம் திகதி நடை...ள்ள எழுதுவினைஞர் ...வி உயர்வுப் பரீட்சைக் ...வினாத்தாள்கள் யாழ். ... திணைக்களத்திற்கு ...வரப்பட்டுள்ளது.

...துவினைஞர் வகுப்பு ...இல் உள்ளவர்களுக்கு 'அ' பிரிவுக்கு பதவி உயர்வுக்கான வினாத்தாள்களும், வகுப்பு 'அ' இல் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுக்கான வினாத்தாள்களும் வந்துள்ளன. இதற்கான அனுமதி அட்டைகளும் எடுத்துவரப்பட்டுள்ளன. (யோ)

...ழ முதனிலைத் தேர்வு

# ...ணைப்பந்தி மெ.மி.த.க.வி மாணவன் முதலிடம்

...ழீழக் கல்வி மேம்பாட்...ரவையினரால் இந்த ...டு நடத்தப்பெற்ற 5ஆம் ...டு இறுதித் தேர்வான ...ழ முதனிலைத் தேர்வு ...ன பெறுபேறுகள் இன்று ...ளியாகியுள்ளன.

...பெறுபேறுகள் பாடசா...லகளுக்கு கல்விக் கோட்...ப் பணிமனைகளினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்தின் 13 கல்விக் கோட்டங்களிலும் கிளிநொச்சி மாவட்டம் பளைக் கல்விக் கோட்டத்திலுமாக 15 ஆயிரம் மாணவர்கள் இத் தேர்வில் தோற்றியிருந்தனர்.

இத் தேர்வில் நல்லூர் கோ

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# புலிகளுடன் பேசுவது குறித்து சந்திரிகாவிற்கு இந்தியா ஆலோசனை எதுவும் வழங்கவில்லை

## இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு

(புதுடில்லி)

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமராக விளங்கியசமயம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக தாம் அவருக்கு ஆலோசனைகள் கூறியதாக வெளியான செய்திகளை இந்தியா நேற்று நிராகரித்தது.

இந்திய வெளியுறவு செயலர் சிறிநிவாசன் புதுடில்லியில் செய்தியாளர்களிடையே பேசுகையில்; சமாதானப் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக ஏதோ ஒருவகையில் சந்திரிகாவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக வெளியான செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என தெரிவித்தார்.

இனப்பிரச்சினை உட்பட இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இலங்கையின் இறைமை,ஒற்றையாட்சி, பிரதே. கௌரவம் ஆகியவற்றை பேணும் விதத்தில் சமாதானத்தீர்வு காணப்படவேண்டும் என்பதே இந்தியாவின் தொடர்ச்சியான கருத்தாகும்.

ஒக்டோபர் 23இல் கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா கொலை தொடர்பான விசாரணைகளில் வெடிபொருள் மற்றும் சட்ட நிபுணர்களின் உதவியை வழங்கி உதவும்படி சிறிலங்கா அரசின் வேண்டுகோளிற்கு இந்தியா சாதகமாக பதிலளித்தது என்றும் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.

# சங்ஙங்களுக்கு புனர்வாழ்வுப் பகுதி போதியளவு மா வழங்கவில்லை

## யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

போதியளவு மா கையிருப்பில் உள்ளதாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் தேவையான மாவைப் பெற்று விநியோகிக்குமாறும் புனர்வாழ்வுப் பகுதி பத்திரிகைச் செய்திகள் மூலம் தெரிவித்திருப்பதானது உண்மைக்குப் புறம்பானது என யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை தெரிவித்துள்ளது.

சபை வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது போதியளவு மா கையிருப்பில் இருப்பதாக தகவல் வெளியிட்ட புனர்வாழ்வுப் பகுதி சங்கங்களுக்கு போதியளவு மாவை விநியோகித்து இருக்க வேண்டும்இந்த நிலையில் மாவைக் கொள்வனவு செய்ய காசோலையுடன் சென்ற சங்கங்களிற்கு நேற்று கப்பலில் மா வந்த பின்னரே விநியோகிக்கப்படும் என்றும்கையிருப்பில்இருக்கும் மாவை விநியோகித்து வருமாறு காரணங்கள் கூறி மா வழங்காது திருப்பப்பட்டது.

தங்களால் வெளியிடப்பட்ட செய்திக்கு அமைய போதியளவு மா விநியோகிக்காமை மட்டுமன்றி உண்மைக்குப் புறம்பாக செய்திகளை தெரிவித்து புனர்வாழ்வுப் பகுதி மக்களை விசனத்திற்குள்ளாக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாண்டிக்குள படையினர் பயணிகள் மீது கெடுபிடி

(தென்மராட்சி)

தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமினூடு செல்லும் பயணிகள் மீது இராணுவத்தினர் தொடர்ந்தும் கெடுபிடிகளை பிரயோகித்து வருகின்றனர்.

இத்தவேளை வடபகுதியிலிருந்து கொழும்புக்கு பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகளை பின்புறமாக றிவேசில் செல்லும்படி இராணுவத்தினர் பணித்து வருவதாகவும், கடந்த 26, 27,28 ஆகிய மூன்று தினங்களில் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. மேலும் தாண்டிக்குளத்தினூடாக வந்தவர்கள் ஒரு பையுடன் பயணம் செல்ல அனுமதிக்கப்பட்டதால் கொழும்பிலிருந்து பெறுமதியான பொருட்களைக் கொண்டு வந்த பல பயணிகள் அவற்றை வவுனியா நகரில் கைவிட்டு வர நேர்ந்ததாக அங்கிருந்து வந்தோர் தெரிவிக்கின்றனர். (86)

# யாழ். பல்கலைக்கு அதிக மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் அடுத்த கல்வியாண்டிற்கு (1994-95) கூடுதலான மாணவர்களை அனுமதிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தாம் வற்புறுத்தி கேட்டுள்ளதாக பல்கலைக்கழகப் பதிவாளர் திரு க. பரமேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ் பல்கலைகழகத்தில் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு போது

( 6ஆம் பக்கம் பார்க்க )

# இன்று எயிட்ஸ் தினம்

உலக எயிட்ஸ் தினம் இன்றாகும். உலக எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வை பெறும் பொருட்டு இன்றைய தினத்தை உலக எயிட்ஸ் தினமாக உலக சுகாதார நிறுவனம் பிரகடனம் செய்துள்ளது. எயிட்ஸ் - பற்றி கவனம் எடுக்க வேண்டும் என்ற

( 6 ஆம் பக்கம் பார்க்க )

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை

# இந்தியா சென்ற குழுவில் முன்னாள் உதவி பொலிஸ் அதிபர்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விசாரணையில் சாட்சியமளிக்கும் வகையில் இந்தியா சென்றுள்ள ஏழு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளில் ஒரு முன்னாள் உதவிபொலிஸ்அதிபரும் அடங்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிநாடொன்றைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் கொலை விசாரணையொன்றுக்காக சாட்சியமளிக்க இந்தியா சென்றுள்ளது இதுதான் முதல் தடவை எனவும் கூறப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்


**நீரிழிவு ஒளடதம்**

நீரிழிவு நோயாளருக்கென பாவிக்கக்கூடிய ஆட்டாமா, குரக்கன்மா, ஒடியல்மா, மற்றும் வறுத்த உழுந்துமா, பச்சை உழுந்துமா, தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் பெற்றுக் கொள்ளுமிடங்கள்; அண்ணா கோப்பிக் கடை (யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில்) (சி-10676)

**மனிதரும் சமூக வாழ்வும்**

சி. கா. செந்திவேல் எழுதிய மனித சமுதாய தோற்றம், வளர்ச்சி பற்றிய பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் - வசந்தம் புத்தக நிலையம் (10202)

**சமூகமாற்றத்திற்கான அரங்கு**

ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒருநாடக ஆச்கவியல் ஆய்வு நூல், எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் வசந்தம் புத்தக நிலையம். (10203)

**தவறிவிட்டது**

சீனிவாசகம் தயாபரன் என்பவருடைய அடையாள அட்டை 27 - 11 - 94 அன்று கோப்பாய் மாவீரர் மயானத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஜென்சி ஒலிப்பதிவுக்கூடம் (பழையபஸ் நிலையத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (10237)

**விற்பனைக்குண்டு**

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு சி. குலசிங்கம் இல 9, நக்கா வீதி (BARக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (10232)


## "வீரமாமுனிவர்" நூல் வெளியீடு

(நல்லூர்)

யாழ் திருமறைக் கலாமன்றத்தினர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி. ப. 4.30 மணியளவில் தமது ''வீரமாமுனிவர்'' என்னும் நூலை வெளியிட்டு வைக்க உள்ளார்கள். இவ் வெளியீட்டு நிகழ்வு 4-ம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள நற்சமக நடுநிலைய

## கிணற்றில் வீழ்ந்து மரணமானார்

(யாழ்ப்பாணம்)

அரியாலை அகதிமுகாமில் குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றினுள் தவறி வீழ்ந்ததில் மரணமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த வாரத்தில் நடந்த இச்சம்பவத்தின் போது அதே முகாமில் வசித்து வந்தவரான அ.பற்குணம்(வயது48) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவர் இருதார மணம் புரிந்தவரெனவும் உடலை முதலாவது மனைவி மருத்துவமனையிலிருந்து பொறுப்பேற்க மறுத்ததை அடுத்து இரண்டாவது மனைவியிடம் உடல் ஒப்படைக்கப்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

## மின்விநியோகம்பற்றி தகவல் திரட்டப்படுகிறது

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மின்சாரப்பகுதி மின்வாசிப்பாளரூடாக கீழ்க்காணப்படும் விபரங்கள் தற்போது பாவனையாளர்கள் வீடுவீடாகச் சென்று திரட்டப்பட்டு வருவதாக மாநகரசபை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

தற்போது சேகரிக்கப்பட்டு வரும் விபரங்கள் உரிமையாளர் பெய,ர் விலாசம், மின்மானி இலக்கம், தற்போதைய வாசிப்பு விபரம், பிரதான இணைப்பு விபரம், உள்ளக இணைப்பு விபரம், நிலுவை வைப்பு தொகை. மின்சாரம் பாவனை நோக்கம், சுமை (Capacity) Valts மின்சாரம் பாவிக்க விரும்புகிறீர்களா என்ற பல கேள்விகளுக்குப் பதிலும் வீட்டு உரிமையாளரிடம் கையொப்பமும் பெறப்பட்டு வருகிறது.

யாழ். மாநகரசபை மின்மானி வாசிப்பாளருக்கு வீட்டு உரிமையாளர்கள் இவற்றைக் கொடுத்து ஒத்துழைப்பு வழங்குமாறு மின்சாரப் பகுதி உயரதிகாரி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## சேவைநலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கடந்த 34 வருடங்களாக வேலணை சேர் -வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில் சிரேஷ்ட ஆய்வுகூட உதவியாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. சி. திருநாமசுந்தரம் அவர்களின் சேவையைப்

வட பகுதிக்கென வந்த

# தொற்று நீக்கி இயந்திரம் மீண்டும் கொழும்பு சென்றது

(யாழ்ப்பாணம்)

காலநிலை சீரற்று இருந்ததால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு என கொழும்பில் இருந்து கப்பலில் கொண்டு வரப்பட்ட தொற்று நீக்கி இயந்திரமும் 50 பை சீமெந்தும் இறக்க முடியவில்லை. இதனால்திரும்பவும் கப்பலுடன் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது,

கடந்த வாரம் கொழும்பில் இருந்து ''பிளாம் போயன்'' கப்பலில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு தொற்றுநீக்கி இயந்திரம் ஒன்றும் சிறிய திருத்த வேலைகளைச் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட 50 பை சீமெந்தும் காலநிலை சீரற்று இருந்ததினால் பருத்தித்துறை துறைமுகத்தில் இப்பொருட்களை இறக்க முடியவில்லை இதனை அடுத்து கப்பலுடன் இப் பொருட்கள் திரும்பவும் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்த மூன்று தொற்று நீக்கி இயந்திரங்களில் இரண்டு ஏற்கனவே பழுதடைந்துள்ளன. இதனால் ஒரு இயந்திரத்தைக் கொண்டு பெரும் சிரமங்களின் மத்தியில் தொற்றுநீக்கி பிரிவு இயங்கி வந்தது. இதனை அடுத்து பணிப்பாளர் எடுத்த கடும் முயற்சியினால் இவ் இயந்திரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல,அனுமதி கிடைத்தது. இதையடுத்து அது கப்பலில் ஏற்றப்பட்டு கொண்டுவரப்பட்ட போதும் இறக்க முடியாதிருந்தது கைக் கெட்டியதும் வாய்க் கெட்டாத நிலையாகும். இதன் பெறுமதி 3 மில்லியன் ரூபா என கூறப்படுகிறது- (இ


**எடிசன் அக்கடமி**

| (யாழ் இந்து அருகில்) 411/1, K. K. S. Rd யாழ்ப்பாணம் | (கொக்குவில் இந்து அருகில்) 27, K. K. S. Rd கொக்குவில் |
|---|---|

எமது இரு நிறுவனத்திலும்
கல்வி ஆண்டு 1995
ஆண்டு 4 முதல் O/L வரை
**ஆரம்பம்**
04 - 12 - 1994 ஞாயிறு மு. ப. 9. 30 மணி
★ புதிய மாற்றங்களுடன், பல முன்னேற்றத் திட்டங்களுடனும் ஆரம்பமாகின்றது.

(சி-10811)



## பதவி வெற்றிடம்

### 01. நூலக உதவியாளர்

தகைமைகள்:- அ) நூலகவியல் பயிற்சி நெறியில் சித்தியடைந்திருத்தல்வேண்டும் அல்லது

க. பொ. த. (உ/த) கற்றவராக இருத்தல் வேண்டும்.

ஆ) குறைந்தது ஒரு வருடமாயினும் நூலகங்களில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை:- 20 - 40

### 02. நூலகப் பணியாளர் (ஆண்)

தகைமைகள்:- அ) ஆண்டு 8 இற்கு மேல் படித்தவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை:- 18 -30

ஜ மாவீரர் படிப்பகத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள் விருப்பத்தக்கதாகும்.

விண்ணப்பப் படிவத்தினை சொந்த கையெழுத்தில் தயாரித்து 05 . 12 . 1994


## நினைவு கூருகின்றோம்...

### 01.12.1994

1985 -ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-அரசடிச் சந்திப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**விஜயன்**-(கணபதிப்பிள்ளை சற்குணானந்தம் - மாமங்கம் - மட்டு)

1986 ம் ஆண்டு மட்டு - ஆரையம்பதி பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஜெயம் - சதீஸ்** (செல்லத்தம்பி மோகனச்சந்திரன் - ஆரையம்பதி - 03 - மட்டு)

1987-ம் ஆண்டு மட்டு -தியாவெட்டவான் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். ராஜ்** (பரமக்குட்டி அருளம்பலம் - வந்தாறுமூலை - மட்டு)

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஜெய்சங்கர் - ஜெய்ச்சா** (தம்பு ஜெயக்குமார்- கோப்பாய் வடக்கு - யாழ்)

**ஜோண்சன்**( - - - - )

1988 -ம் ஆண்டு யாழ் - கரவெட்டிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நீசன் - ஜெகதீசன்** (மரியாம்பிள்ளை அன்ரனி நிக்சன் - வதிரி, நெல்லியடி - யாழ்)

**சுந்தர்** (சின்னத்தம்பி சுந்தரராஜன் - மத்தொனி, கரவெட்டி - யாழ்)

பளைப்பகுதியில் தேசவிரோதிகளால் சுடப்பட்டு பலியான நாட்டுப்பற்றாளரான.

**சின்னத்துரை இரத்தினம்** (விஷ்ணுமகால்-பளை)

1989 ம் ஆண்டு திருமலை -தம்பலகமம், குரங்கல் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். திவாகர்** ( சுப்பையா ஜீவராஜ் நொச்சிக்குளம் - திருமலை)

**மங்களதாஸ்** ( - - - முல்லைத்தீவு)

**குணம்** ( - ரவிச்சந்திரராஜ் - மன்னார்)

நாவாந்துறையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான, புத்தெழில் இலக்கிய சஞ்சிகை ஆசிரியரான,

**மு. திருஞானசேகரம்** (புத்தூர் கிழக்கு)

1990 -ம் ஆண்டு மாங்குளம் முகாம் தகர்ப்பின் போது தப்பியோடிய சிறிலங்கா சிப்பாயுடன் நிராயுதபாணியாக மோதியபோது அச்சிப்பாய் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்திருந்து வைத்தியசாலையில் எமைப் பிரிந்த நாட்டுப்பற்றாளரும் மாமனிதருமான வன்னிக் கிழவல்,

**பொ. அருணாசலம்** (பாலமோட்டை -வவுனியா)

1992 -ம் ஆண்டு மட்டு - மகிழவெட்டுவான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். மதிமுகம் - நவாஸ்** (இளையதம்பி அரியநாயகம் - பெரியபுல்லுமலை - மட்டு)

**மேஜர் அபயன்** (கிருஷ்ணமூர்த்தி சிவகுமார் -தெல்

## "வீரமாமுனிவர்" நூல் வெளியீடு

(நல்லூர்)

யாழ் திருமறைக் கலாமன்றத்தினர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி. ப. 4.30 மணியளவில் தமது ''வீரமாமுனிவர்'' என்னும் நூலை வெளியிட்டு வைக்க உள்ளார்கள். இவ் வெளியீட்டு நிகழ்வு 4-ம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள நற்சமுக நடுநிலையத்தில்நடைபெற உள்ளது. (17

## மரக்கறிகள் விலை உயர்வு

வலிகாமம் மேற்கில் மரக்கறி வகைகள் சிலவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேற்படி பகுதிகளின் பொதுச் சந்தைகளில் காணப்படும் மரக்கறிகளில் கத்தரி, பாவல், பயற்றை, கோவா, வெண்டி போன்றவற்றின் விலைகளே அதிகரித்துக் காணப்படுகின்றன. இவற்றில் கத்தரி 70 ரூபாவாகவும், பாவல் 60 ரூபாவாகவும், பயற்றை 50 ரூபாவாகவும், வெண்டி 20 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

மேலும் கோவா, கறட் போன்றவைகளின் விலை அதிகரித்துள்ளன. இதே வேளை மரவள்ளிக்கிழங்கு 5 ரூபா முதல் 7 ரூபா வரையும், கரணைக்கிழங்கு 8 ரூபா முதல் 10 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றன. (41)


SHORT TERM CLASSES

டிசம்பர் விடுமுறையில் குறுகியகால பயிற்சி வகுப்புக்கள்

கேக் ஐசிங், சமையற்கலை, ஒப்பனைக்கலையும் தலை அலங்காரமும் (**Make up and Hair Dressing**) ஒருமாதகால வகுப்புக்கள் வரும் 5-12-94 திங்கள் முதல் ஆரம்பமாக உள்ளன. சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

Yogi Home Science Academy

71, நாயன்மார் வீதி,
கச்சேரி-நல்லூர் றோட்
நல்லூர், யாழ்ப்பாணம்

(10240)


ளார். (24)

## சேவைநலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கடந்த 34 வருடங்களாக வேலணை சேர் -வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில் சிரேஷ்ட ஆய்வுகூட உதவியாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. சி. திருநாமசுந்தரம் அவர்களின் சேவையைப் பாராட்டி மேற்படி வித்தியாலய ஆசிரியர் நலன்புரிக் கழகம் அண்மையில் 'சேவை நலம் பாராட்டு விழா' ஒன்றை நடாத்தியது. கழகத் தலைவர் திருமதி வ. சிவபாலன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

## விவசாயக் கடன் வழங்கல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் நூறு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு பயனாளிக்கு 12,000/- வீதம் விவசாயக் கடன் 08.11.94 ல் வட்டக்கச்சிப் பகுதியில் 51 பயனாளிகளுக்கும், ஸ்கந்தபுரத்தில் 49 பயனாளிகளுக்கும் மொத்தமாக 12 இலட்சம் ரூபா 09 ம் திகதி அல்லது 10-ம் திகதிகளில் வழங்கப்படுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்படுகிறது.


பவம் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை:- 20 - 40

02. நூலகப் பணியாளர் (ஆண்)

தகைமைகள்:- அ) ஆண்டு 8 இற்கு மேல் படித்தவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை:- 18 -30

ஜ் மாவீரர் படிப்பகத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கதாகும்.

விண்ணப்பப் படிவத்தினை சொந்த கையெழுத்தில் தயாரித்து 05 . 12 . 1994 திங்கட்கிழமையன்று காலை 9.00 மணிக்கு மாவீரர்படிப்பகத்திற்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாவீரர் படிப்பகம்
பலாலி வீதி,
கோண்டாவில்.

(10244)



வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

1995ஆம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

01-01-1995 தொடக்கம் 31-12-1995 வரையிலான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் குத்தகை அறவிடுதற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 14-12-1994ந் திகதி காலை 10. 00மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இதே தினம் காலை 11. 00மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்

| கேள்வி விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்பும் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச்சந்தை, வல்வெட்டித்துறை | 44055/- | 1000/ | 100/ |
| 2. மீன்சந்தை, வல்வெட்டித்துறை | 30140/- | 1000/- | 100/- |
| 3. மாட்டிறைச்சிக்கடை, வல்வெட்டித்துறை | 30580/- | 1000/- | 100/- |
| 4. ஆட்டிறைச்சிக்கடை, வல்வெட்டித்துறை | 10000/- | 1000/- | 100/- |
| சேவை; | | | |
| குப்பை கூழங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரப்பெட்டி வாடகைக்கு வழங்குதல் | | 250/- | 100/- |

மேற்படி வைப்புப்பணமும் கேள்விப்படிவக்கட்டணங்களும் பணமாகச் செலுத்தப்படுவதன்பேரில் 12-12-1994 ந் திகதி நண்பகல் 12. 00 மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ந. ஞானவேல்
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 18-11-1994

(சி-10810)



மு. திருஞானசேகரம் (புத்தூர் கிழக்கு)

1990 -ம் ஆண்டு மாங்குளம் முகாம் தகர்ப்பின் போது தப்பியோடிய சிறிலங்கா சிப்பாயுடன் நிராயுதபாணியாக மோதியபோது அச்சிப்பாய் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்திருந்து வைத்தியசாலையில் எமைப் பிரிந்த நாட்டுப்பற்றாளரும் மாமனிதருமான வன்னிக் கிழவல்,

பொ. அருணாசலம் (பாலமோட்டை -வவுனியா)

1992 -ம் ஆண்டு மட்டு - மகிழவெட்டுவான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப். மதிமுகம் - நவாஸ் (இளையதம்பி அரியநாயகம் - பெரியபுல்லுமலை - மட்டு)

மேஜர் அபயன் (கிருஷ்ணமூர்த்தி சிவகுமார் -தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட [illegible] தரையிலும், கடற்பரப்பிலும் இந்தியப்படையினராலும், சிறிலங்காப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி- 10809)



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
4. 9. 1974

தாயக மண்ணில்
24. 11. 1992

வீரவேங்கை கதிரவன்

கற்கண்டு விஜயலக்குணன்
(விழிசுட்டி சங்கானை)

தாயகத்தின் விடிவிற்காய்
தனை ஈந்திட்ட கதிரவனே
தரணியிலே கதிரவனாய்
உனைக்காண துடிக்கின்றோம்.

இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர்கள் நண்பர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(10238) - குடும்பத்தினர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...



# ஐ. தே. க. அரசு வழங்கியிருந்த ஆயுதங்களால் அச்சுறுத்தல்

## - அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய சாதனங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீர்ப்பாசன மின் சக்தித்துறை அமைச்சரும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த 'சிலுமின' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இத்தகைய ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் மற்றும் இந்த ஆயுதங்களினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் என்பன குறித்து பொதுமக்கள் தமக்குத்தெரிந்த தகவலைத் தந்து உதவவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சும், இராணுவத் தலைமை அலுவலகமும் கடந்த காலங்களில் வழங்கியிருந்த இந்த ஆயுதங்கள் சட்ட விரோதமான பல நடவடிக்கைகளுக்கு காரணமாக இருந்துள்ளதாகவும், இதுவரையில் பொலிசாரால்இத்தகைய ஆயுதங்களில் மூவாயிரத்துக்கும் அதிகமானவை மீட்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# பாராளு. நிறைவேற்றும் சட்டத்தை உச்ச நீதிமன்று நிராகரிக்கலாம்

## புதிய அரசியலமைப்பு குறித்து பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

அரசாங்கம் முன் வைக்கவுள்ள அரசியலமைப்பு மாற்றங்களில் பாராளுமன்றத்தை விடவும், அரசியலமைப்புக்கு முதலிடம் வழங்கப்படவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

நீதி மற்றும் அரசியலமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில், சோல்பரி அரசியலமைப்பின் பல அம்சங்கள் மீண்டும் அறிமுகமாக்கப்படலாம் எனவும் தெரிவித்தார்.

இதன்படி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்தச் சட்டமும், அது அரசியலமைப்புக்கு எதிரானதாக இருப்பின் செல்லுபடியற்றது என அறிவிக்கும் உரிமை உச்சநீதிமன்றத்திற்கு வழங்கப்பட இருக்கிறது. தற்போது அமுலில் உள்ள 1978இன் அரசியமைப்பிலும், 1972இன் அரசியலமைப்பிலும் பாராளுமன்றமே அதி உயர் சட்டவாக்க சபையாக குறிப்பிடப்பட்டு இருப்பதும் தெரிந்ததே.

கடந்த 22வருட கால அனுபவம் அரசியலமைப்பின் இந்த மட்டுப்படுத்தப்பட்ட தன்மை போதாமல் இருப்பதையே காட்டுவதாக பேராசிரியர் பீரிஸ் எழுத்து மூலம் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக இருக்கும் கால அவகாசம் நீதித்துறை மரபுகளுக்கு ஏற்றபடி அதனை எதிர்ப்பதற்கு சாதாரண குடிமக்களுக்குபோதுமானதாக இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய யோசனையின்படி உச்சநீதிமன்றம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களில் குறுக்கீடு செய்வதற்கான உரிமை படைத்த தனித்த ஒரு நிறுவனமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அரசியலமைப்பின் மூலம்

# ஜே. ஆர். அனுபவிக்கும் சலுகைகள் ஒழிக்கப்படும்

## - சிறிமா

(கொழும்பு)

''அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எனது குடியுரிமையை பறித்தது போன்று நாம் அவரின் குடியுரிமையை பறிக்கப்போவதில்லை. எனினும் அவர் தற்போது முன்னாள் ஜனாதிபதி என அனுபவிக்கும் பல சலுகைகளை புதிய அரசியல் யாப்பை கொண்டு வருவதன்மூலம் பறிப்போம்'' என பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜே. ஆர். எனது குடியுரிமையை பறித்தமைக்கு அவர் என்மீது கொண்டிருந்த அச்சமே காரணமாகும். ஜே. ஆரின் நலன்களை கவனிக்கவேயென தற்போது பெருமளவு பொதுசன நிதி செலவழிக்கப்படுகின்றது. இது அரசியல் யாப்பின் மாற்றம் மூலம் இல்லாதொழிக்கப்படும் என்றும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

# ரணிலின்தலைமையைஏற்க ஜே. ஆர் வேண்டுகோள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலின் தலைமைப் பதவியை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஐ. தே. கவினர் எவரும் ஈடுபடக் கூடாது. அவ்வாறு ஈடுபடுவது கட்சியையே பாதிக்கும் என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்காவின் முக்கிய எதிர்ப்பாளர் என கருதப்படும் சுசில் முனசிங்கவை சந்தித்து இக்கருத்தை ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்ததாக சிங்கள தினசரி ஒன்று குறிப்பிட்டுள்ளது.

# இரணவில வானொலி நிலையம் பற்றி ஆணைக்குழு விசாரணை தேவை

## மக்கள் நடவடிக்கைகுழு கோரிக்கை

(கொழும்பு)

இரணவிலவில் அமைக்கப்பட்டுவரும் அமெரிக்க வானொலி அஞ்சல் நிலையம் தொடர்பாக மக்கள் மத்தியில் எழுந்துள்ள அதிருப்தி உணர்வுகளைப் போக்கும் வகையில் சில சலுகைகளைவழங்க அமெரிக்க செய்தித் தொடர்புத்துறை அலுவலர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இத் தகவலை மக்கள் நடவடிக்கை குழுவின் பேச்சாளர் வெளியிட்டதுடன் இத்னை ஒரு நல்ல சமிக்கை எனவும் வர்ணித்துள்ளார். எனினும் இந்த திட்டம்பற்றி பூரணமான விசாரணை நடத்த சுதந்திரமான ஆணைக்குழு நியமிக்கப்படும் வரையில் மக்களின் நடவடிக்கைகள் தொடரும் எனவும் குறிப்பிட்டார்.

தற்போது 418 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுவரும் இத் திட்டத்தை 1000 ஏக்கர் வரை விரிவாக்குவதற்கு ஒப்பந்தத்தில் இடமிருக்கின்ற போதும் மேலதிக நிலம் எதையும் சுவீகரிப்பதில்லை என்று எழுத்து மூலமான உத்தரவாதம் வழங்கவும், இவ் வானொலி நிலையத்திலிருந்து உலக நிர்வாக வானொலி அலைவரிசைகளால் அங்கீகரிக்கப்பட்ட அலைவரிசைகளிலேயே ஒலிபரப்பு செய்யப்படுமெனவும், இராணுவ தேவைகளுக்குப் பயன்படும் ஆகக் குறைந்த அலைவரிசை ஒலிபரப்பு (Very low frequency) எதுவும் செய்யப்படமாட்டாது எனவும், அமெரிக்க செய்தித் தொடர்பு அலுவலர் டங்கன் எச். மக்கனேஸ் உறுதியளித்திருக்கிறார். அத்துடன் மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக மேலதிக உத்தரவாதங்கள் வழங்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு கேந்திர நிலையங்களில்

# மாவீரர் நாளன்று பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

மாவீரர் தினத்திற்கு முந்தைய நாளான நவம்பர் 26 ஆம் திகதியன்று கொழும்பில் பொலிஸ் தலைமையகம், விமானப்படை தலைமையகம்,குற்ற புலனாய்வுத்துறை கட்டடம் என்பனவற்றிற்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

மேற்படி இலக்குகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தவுள்ளதாக கிடைத்த புலனாய்வு செய்திகளையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்.

# ஈ.பி.டி.பி. அலுவலகம் பொலிசாரால் சோதனை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஈ. பி. டி. பியின் தலைமையலுவலகம் கடந்த வெள்ளி காலை சிறிலங்கா பொலிசாரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

ஈ. பி. டி. பியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியில கொல்லப்பட்டது தொடர்பாக பொலிசார் அங்கு விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரிய வருகின்றது.

சூரி என அழைக்கப்படும் உதய சூரியகுமார் என்பவரது மரணத்துடன் ஈ.பி.டி.பிஉறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும் இது தொடர்பாக சில ஈ. பி. டி. பியினர் கைதாகியிருப்பதாகவும் விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் கூறியுள்ளனர்.

ஜனாதிபதி ஆட்சி முறையினால்

# சிறுபான்மையினர் பாதுகாப்பு பெறுகின்றனர் என்பது மாயை

## நீதி அரசியலமைப்பு அமைச்சர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பானது எனக் கருதுவது ஒரு மாயையே என்கிறார் நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்.

மறைந்த லலித் அத்துலத்முதலியின் 58-வது பிறந்ததின நினைவுச் சொற்பொழிவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய பீரிஸ், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் போது சிறுபான்மை இனமக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையிலான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும். நிறைவேற்று அதிகாரஜனாதிபதியை தெரிவு செய்வதில் சிறுபான்மை இனமக்கள் முக்கிய பங்கு வகிப்பதால் அந்த ஆட்சி முறை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக இருப்பதாக கருதுவது ஒரு மாயையே. கடந்தகால அனுபவங்களை நோக்கும் போது இதைத்தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

நாம் சிறு பான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கும்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு
விசேட மலிவு விற்பனை
1.12.1994 முதல் நடைபெறுகின்றது. காலணி வகைகளும் அடப்ப வகைகளும் (Bag)
டி. எஸ். ஐ. பாவனையகம்
281C இளங்கோ வீதி (மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம் (10229)

G. A. Q பரீட்சை
எடுத்த மாணவர்களுக்கான
B. A. Part I
விரிவுரைகள்

காமினி கொலை தொடர்பாக தேடப்பட்ட

# பத்து தமிழர்களும் நாட்டைவிட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

பாலத்துறைக் குண்டு வெடிப்புத் தொடர்பாக இரகசியப் ... துழைப்பு கோரப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ்

# பயிலுநர் ஆசிரியர் பரீட்சை மார்ச் மாதத்தில் நடக்கும்

(கொழும்பு)

பயிலுநர் ஆசிரியர்களது இரண்டாம் கட்டப்பரீட்சை அடுத்த ஆண்டு மார்ச் மாத ... குழுவினருடன் நடத்தியபேச்சு வார்த்தைகளின் பின்னரே இது தெரிய வந்தது.

1987 - 1990 ஆண்டுக்கால

# B. A. Part I

விரிவுரைகள்

ஆரம்பம் 3 . 12 . 94

(10 மணி)

நேர அட்டவணையை அலுவலத்தில் பெற்றுக் கொள்ளவும்.

S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்

(சி/10804)


(கொழும்பு)

பாலத்துறைக் குண்டு வெடிப்புத் தொடர்பாக இரகசியப் பொலிசாரினால் தேடப்பட்ட வெலிக்கடை ஒபேசேகரபுர வீட்டிலிருந்த தமிழ்ப் பெண்களுட்பட பத்துப் பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சந்தேக நபர்களை அடையாளம் காணும் பொருட்டு சர்வதேச பொலிசாரின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் உயரதிகாரி ஒருவர் திவயின பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்பு நடைபெற்ற இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள் இவர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கலாம் எனவும் இரகசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பயிலுநர் ஆசிரியர்களது இரண்டாம் கட்டப்பரீட்சை அடுத்த ஆண்டு மார்ச் மாதமளவில் நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

அண்மையில் இலங்கை ஐக்கிய ஆசிரிய சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று தேசிய கல்வி நிறுவன பணிப்பாளர் நாயகம் பிரேமதாசஉடுகம, தொலைக்கல்வி பிரிவின் பணிப்பாளர் திருமதி பணியக்கார ஆகியோர் அடங்கிய ...

... வார்த்தைகளின் பின்னரே இது தெரிய வந்தது.

1987 - 1990 ஆண்டுக்காலப்பகுதியில் பயிலுநர் ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்ட 35 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களின் இந்த இரண்டாம் கட்டப்பரீட்சையே இவ்வாறு 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் நடைபெறும் எனத் தெரியவந்துள்ளது.

இச்சந்திப்பின்போது இதுவரை முற்றுப்பெறாத மொடியூல்கள் டிசம்பர்மாத இறுதிக்குள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இறுதிப்பரீட்சைகள் மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நடத்த முடியும் என்றும் தேசிய கல்வி நிறுவனப்பணிப்பாளர் நாயகம் நம்பிக்கை தெரிவித்தாராம்.

... கொள்ள முடியும்.

நாம் சிறு பான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். தொகுதிகளிலிருந்து 160 உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குத் தொகுதிவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும். 225 ஆசனங்களில் எஞ்சியோர் பிரதேச வாரி பிரதி நிதித்துவம் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் இவர்கள் தேசியரீதியில் அல்லாமல் மாவட்டரீதியில் விகிதாசார பிரதிநிதித்துவம் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் இந்த முறை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்கும் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும் என்றார்.

## சந்திரிகா அரசாங்கத்துக்கு ஜே.வி.பி.தொடர்ந்து ஆதரவு

- டாக்டர் சுபாஷ் சந்திராபெர்னாண்டோ

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின்ஆட்சிக்கு மக்கள் விடுதலை முன்னணியான ஜே.வி.பி. தொடர்ந்து ஆதரவு வழங்கும். இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரெனக் கூறிக்கொள்ளும் டாக்டர் சுபாஸ் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார். அரசபடையினரால் கொல்லப்பட்ட ரோகண விஜயவீராவின் மைத்துனரான இவர் மேலும் கூறுகையில், ஜே. வி. பியின் உறுப்பினர்களாகவுள்ள சுமார் ஒருலட்சம் பேரும் ஐ. தே. க. மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் ஜே.வி.பி. ஆயுதம் தாங்கிய வன்முறைப் பாதையைக் கைவிட்டு முற்போக்கான ஜனநாயக அரசியற் பாதையில் ஈடுபட்டிருப்பதாகவும், முற்போக்காளர் அனைவரும் திருமதி சந்திரிகாவை ஆதரிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

ஜனநாயகத்தை மீள நிலைநாட்டவும், சட்டத்தின் ஆட்சியை தோற்றுவிக்கவும், நீதித்துறையிலும், பத்திரிகைத் துறையிலும் சுதந்திரத்தைப் பேணவும் பொதுஜன ஐக்கிய முன்னணி பாடுபடுவதாக அவர் மேலும் கூறினார்.


வெகு விரைவில் நடைபெறவுள்ளது

புத்தூர்

# யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி



அபிவிருத்தி நிதிக்காக கல்லூரி மாணவர்களால் நடாத்தப்படும்

பருத்திநகர் பெற்றெடுத்த அமரர் M. துரைரத்தினம் அவர்களின் மாணவர்களில் ஒரு சிறந்த மாணவனாக திகழ்ந்ததால் 10-06-1993 அன்று பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக விழாவில் ஓர் நிறைவான உடற்பயிற்சி ஆசிரியர் என கௌரவித்து சாண்டோ பட்டம் சூட்டப்பட்ட பொலிகை மண் பெற்றெடுத்த சாண்டோ S. செல்வராசா அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களின்

மயிர் கூச் செறியும்...

# மாபெரும் வீர தீர விளையாட்டுக்கள்

பத்திற்கும் மேற்பட்ட விளையாட்டுக்களும், கண்கவர் நிகழ்வுகளும் நடைபெறும்.

இடம்:- கல்லூரி மைதானம்

பார்க்கத் தவறாதிர்கள் அமர்வுக்கு முந்துங்கள்

- கல்லூரி அபிவிருத்திக்குழு

(10235)



நினைவூட்டல்

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

சகல அங்கத்துவ பொதுச்சபை பிரதிநிதிகட்கும், அன்புடையீர்,

எதிர்வரும் 04-12-94 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு விசேட பொதுக்கூட்டம் யா/சித்தன் கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

தலைவர்,

**பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,**

**சங்கானை.**

(சி-10805)


## தமிழாராய்ச்சி மாநாட்டில் ஆவணக்காப்பக கண்காட்சி

(கொழும்பு)

தமிழகத்தில் தஞ்சாவூரில் எதிர்வரும் ஜனவரியில் நடைபெறவுள்ள 8 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு அங்கு உலகத் தமிழர் ஆவணக் காப்பகக் கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கு குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் முயன்று வருகிறார். மேற்படி மாநாடு முடிந்த பின்னர் தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலும் இதுபோன்ற கண்காட்சிகளை நடத்தவும் இவர் திட்டமிட்டுள்ளார்.

கடந்த 35 வருடங்களாக ஆவணத்துறையில் ஈடுபட்டு வரும் இவர் உலகத் தமிழர் ஆவணக்காப்பகக் கண்காட்சி ஒன்றை அண்மையில் கண்டியில் நடத்தினார்.

போதியளவு இட ஒதுக்கீடு செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக தமிழக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து இவர் தனது சொந்த முயற்சியில் இவற்றைத் தமிழகம் கொண்டு சென்று தஞ்சாவூரிலும் ஏனைய பகுதிகளிலும் மக்கள் பார்வைக்காக வைப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்.

## மதியஉணவுமுத்திரை வழங்க ஏற்பாடு

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கான விசேட மதிய உணவு முத்திரை வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இடம் பெயர்ந்து பல பகுதிகளிலும் வாழ்ந்து வரும் மேற்படி பிரதேச செயலர் பிரிவு மக்கள் தத்தமது கிராம சேவையாளர்கள் மூலம் மேற்படி விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விபரங்களை பூர்த்தி செய்து, கல்வி கற்கும் பாடசாலை அதிபர்களிடம் அத்தாட்சிக் கடிதம் பெறப்பட்டு, படிவத்துடன் சேர்த்து கிராம சேவையாளரிடம் சமர்ப்பித்து ஒத்துழைப்பு நல்குமாறு ஊர்காவற்றுறை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பற்றறி, சாம்பு எடுத்துவர படையினர் அனுமதிமறுப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் தடைமுகமூடாக பற்றறிகள், சாம்பு போன்ற பொருள்களை பயணிகள் எடுத்துவருவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத் தடையை அரசு தளர்த்தியுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகளில் படத்துடன் அரசு பிரசாரம் செய்யும் வேளையில் இராணுவத்தினர் பொருளாதாரத்தடையை மேலும் வலுப்படுத்தி வருவதாக கொழும்பிலிருந்து வரும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பயணி ஒருவர் இரு பற்றறிகளை எடுத்துவருவதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்டு வந்ததாகவும் தற்போது பற்றறிகள் எவையும் எடுத்துவருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

## பழைய இடத்தில் இயங்கும் பாடசாலை

(தொல்புரம்)

இராணுவ நடவடிக்கைகளின் போது அடிக்கடி எறிகணை வீச்சுக்கள் இடம்பெற்ற காரணத்தினாலும், அச்சத்தினாலும் இடம்பெயர்ந்து மூளாயில் இயங்கி வந்த பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலை மீண்டும் பொன்னாலையில் உள்ள தனது பாடசாலைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இந்த பாடசாலை சில காலம் இயங்காமல் இருந்ததையிட்டு இதற்கான சிறு திருத்த வேலைகளுக்குதேவையான நிதியுதவியை கல்வித் திணைக்களத்தினர் வழங்கியுள்ளனர். தற்போது பாடசாலை மாணவர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. இப் பாடசாலை இடம்பெயர்ந்த நிலையில் மூளாய் அ.மி.த.க பாடசாலையில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது (41)

## கூட்டுறவு சங்கத்தின் புதியகிளை திறப்பு

(கொழும்புத்துறை)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் நவாலி, ஆனைக்கோட்டை பகுதியில் தங்கியிருக்கும் மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு நவாலி அரசடியில் அதன் கிளை ஒன்றை அண்மையில் சம்பிரதாய பூர்வமாக மங்கள விளக்கேற்றி திறந்து வைத்தது.

இதனால் இப்பகுதிக்குடியிருப்பாளர்கள் நன்மைஅடைவர். (24)

## விசேட பொதுக்கூட்டம்

காங்கேசன்துறை லங்கா சிமெந்து துறைமுக ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று எதிர்வரும் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக உள்ள தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் நடைபெற உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விதை உருளைகிழங்கு கப்பலில் வந்துள்ளது

(வடமராட்சி)

கொழும்பு துறைமுகத்தில் ஒரு மாத காலமாக குமண கப்பலில் ஏற்றப்பட்டு தேங்கிக் கிடந்த விதை உருளைக் கிழங்கு தற்போது கப்பலில் இருந்து இறக்கப்பட்டு வருகின்றது.

யாழ். கமநல சேவைத் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்ட இவ்விதை கிழங்குகள் முளைத்த நிலையிலும் சில பழுதடைந்த நிலையிலும் வந்துள்ளன. செப்டம்பர் 4-ம் திகதி பொதி செய்யப்பட்ட இவ் விதை கிழங்கு ஒக்டோபர் 28-ம் திகதி கப்பலில் ஏற்றப்பட்டு தற்போது இறக்கப்பட்டன.

## கப்பல் சேவை இடைநிறுத்தம்

இப்பொழுது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கொழும்புக்குச் செல்லும் நோயாளர்களுக்கான பிளம் போயன் கப்பல் சேவை மறு அறிவித்தல் வரை நடைபெற மாட்டாதென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## திருவிழாச் சிந்தனை

திருநெல்வேலி புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாச் சிந்தனை நிகழ்வுகள் எதிர்வரும் 3-ந் திகதி வரை நடைபெறவுள்ளன. தினமும் திருப்பலி வாசகங்களின் தலைப்புக்களில் சிந்தனைகள் வழங்கப்படும்.

## பொருட்களை இறக்குவதில் தொழிலாளர்கள் சிரமம்

(வடமராட்சி)

கடலில் ஏற்பட்ட அசாதாரண சூழலையடுத்து தொழிலாளிகள் தமது கூடுதல் சக்தியை பிரயோகித்தே பொருள்களை கரைக்கு எடுத்து வருகின்றனர்.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கி இழுத்து வரும் இழுவைப் படகு கடலில் அங்குமிங்குமாக இழுபட்டுச் செல்வதினால் தொழிலாளர்கள் கயிறு கட்டி பெரும் சிரமத்தின் மத்தியில் கரைக்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பொருள்கள் இறக்கும் வேலைகள் சாதாரண நாட்களில் காணப்படுகின்ற துரித வேகம் குறைந்துள்ளது. அதே சமயம் நல்ல நிலையில் போதிய இழுவைப் படகுகள் இல்லாத குறையும் நீடித்துள்ளது. போதிய வசதியின்மையாலும் சீரற்ற காலநிலையினாலும் தொழிலாளர்கள் மிகுந்த சிரமமடைகின்றனர்.

(யோ)

## கரைவலை மீன்பிடித் திட்டம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டத்தினால் அளம்பில் கிராமத்தில் கரைவலை மீன்பிடித் திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தில் 35 குடும்பம் நேரடி தொழில்வாய்ப்பை பெறுவதுடன் புரத உணவான மீனும், கருவாடும் இத்திட்டத்தால் பெருமளவு உற்பத்திசெய்யப்படுகின்றது.

# பாடசாலை புனரமைப்புக்களில் மூதூர் தமிழ்ப்பகுதி புறக்கணிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் பிரதேசத்தில் இருக்கும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் புறக்கணிப்புடன் நடந்து கொள்வதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

தமிழ்ப் பாடசாலைகள் நீண்ட காலமாகவே புனரமைப்பு செய்யப்படவில்லை எனவும் இவற்றுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் மேலும் கூறப்படுகின்றது.

இதனால் பாடசாலைகளில் தளபாட பற்றாக்குறை கூட ஏற்பட்டிருப்பதாகவும், மாணவர்கள் தரையிலிருந்தே கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகிறது.

## கண்டெடுப்பு

நல்லூர் முடமாவடிப் பகுதி வீதியில் மூக்குக் கண்ணாடி ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரங்காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

## நோயாளர் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது அரசினர் வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்களில் நோயாளர்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கிராமப்புறங்கள் உட்பட சிறுவர்களுக்கு வயிற்றோட்டம், ஒருவித காய்ச்சல் முதலான நோய்கள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## சனசமூக நிலையங்களுக்கு ஊக்குவிப்பு நன்கொடை

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபையைச் சேர்ந்த சனசமூக நிலையங்களுக்கான ஊக்குவிப்பு நன்கொடை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்திற்கு அமைவாக திறமையுடன் தரமாக இயங்கும் சனசமூக நிலையங்களுக்கே ஊக்குவிப்பு நன்கொடை வழங்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் ஒவ்வொரு சனசமூக நிலையங்களுக்கும் விண்ணப்பப் படிவங்கள் பிரதேச சபை அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்தப் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கிடைக்கப்பெற்றதும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரால் உறுதிசெய்யப்படும் சனசமூக நிலையங்களுக்கே மேற்படி நன்கொடை உதவி வழங்கப்படும் என வலிமேற்கு பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (41)

## பாடசாலையில் குழாய்க் கிணறு

சாவகச்சேரி மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களின் நன்மை கருதிக் குழாய்க்கிணறு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. (24)

## சிறப்புத்தேர்ச்சி பெற்றார்

(கொழும்புத்துறை)

யாழ். சைவ பரிபாலன சபையின் இலங்கைச் சைவ நெறித்தேர்வு 1993 ஐப்பசியில் இடம் பெற்றபோது யாழ் ஊனமுற்றோர் சங்கத்தைச் சேர்ந்தவரும், யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆண்டு எட்டு மாணவன் செல்வன் சுப்பிரமணியம் ஸ்ரீதரன் சிறப்புத் (ஏ) தேர்ச்சியடைந்துள்ளதாகச் சபையின் தலைவர் திரு. இ. மகேந்திரன் அறிவித்துள்ளார். (24)

## சூழல் பாதிப்பு பொதுமக்கள் கவலை

(கொழும்புத்துறை)

இறைச்சிக் கடைக்கழிவுப் பொருள்களையும், இறந்த கால்நடைகளையும் எதேச்சையான முறையில் போடுவதால் துன்னாலை தெற்கிலுள்ள முள்ளி என்னும் இடத்தில் சகிக்கமுடியாத துர்நாற்றம் வீசுவதாகவும், கால்நடைகளை மேய்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளததாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இதனால் இப்பகுதி மக்கள் ஆழ்ந்த கவலையும், மனவேதனையும் அடைந்துள்ளனர் என அறியப்படுகிறது.

# நேபாளத்தின் பிரதமராக மன் மோகன் பதவியேற்பு

நேபாளத்தின் முதலாவது கம்யூனிஸ்ட் அரசின் பிரதமராக மன் மோகன் அதிகாரி நேற்று மன்னர் பிரேந்திரா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் 74 வயதான இவர் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான அரசியல் ஈடுபாடு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. காசி இந்து பல்கலைக் கழகத்தில் மாணவராக இருந்த போதே வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றமைக்காக பதினெட்டு மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவித்தவர்.

எனினும் முப்பது நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் இவர் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்ட வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது நேபாளத்தின் மன்னராட்சி முறைக்கு எதிராகப் போராட்டம் நடத்தியமைக்காக மன்மோகன் அதிகாரி 18 ஆண்டு காலம் சிறையில் இருந்தது தெரிந்ததே.

## எதிர்க்கட்சி போராட்டம்; போக்குவரத்து சீர்குலைவு

பங்களாதேசத்தில் அரசுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் நேற்று நாடளாவிய போராட்டம் ஒன்றை நடாத்தினர். இதனால் பஸ், ரயில் போக்குவரத்துகள் ஸ்தம்பித நிலையை அடைந்தன. வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பங்காளதேச அரசு பதவி விலக வேண்டுமெனவும், காபந்து அரசாங்கமொன்றின் கண்காணிப்பின் கீழ் புதிய பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருவது தெரிந்ததே.

சேரன் பல் பொருள் வாணிபம்

# சேரன் பல் பொருள் வாணிபம்

## சுன்னாகம்

## 1-ம் ஆண்டு நிறைவு நாளில் ( 01 - 12 - 1994 )

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் உங்களிற்கு பணி செய்ய உங்கள் வாழ்த்துக்களையும் ஆதரவையும் வேண்டுகின்றோம்.

### எமது கிளைகள்

யாழ்ப்பாணம்
சாவகச்சேரி
கொடிகாமம்
நெல்லியடி
பருத்தித்துறை

கூடிய விரைவில்
உடுப்பிட்டி



(சி-10793)

### எமது சிறப்புக் கடைகள்

சேரன் வேளாண் இடுபொருள் வாணிபம்
சுன்னாகம்

எழினி புடவை வாணிபம் (யாழ்)
எழிற் கூடம் (யாழ்)
சேரன் காகிதாதிகள் வாணிபம் (யாழ்)
சேரன் மருந்து வாணிபம் (யாழ்)
விக்ரர் இயந்திர உதிரிப் பொருள் வாணிபம் (யாழ்)
யாழ்ப்பாணன் விற்பனை நிலையம் (யாழ்)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

### சிந்தனைக்கு

ஆக்கிரமிப்பைத் தொடங்கும் நாடு ஒவ்வொன்றும் தற்காப்புக்குத்தான் நடவடிக்கை எடுப்பதாகச் சாதிப்பது வழக்கம்.

-ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## 'றோ'வின் சதி

தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரனைக் கொலை செய்வதற்கு இந்தியப் புலனாய்வுத்துறையான "றோ' தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தற்பொழுது வெளியாகும் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. இதற்கெனப் பல வழிமுறைகளை 'றோ' கையாண்டதாகவும், பல வழிமுறைகளைச் சிந்தித்ததாகவும் கூறப்படுகின்றது.

தலைவர் பிரபாகரன் மீதான இந்திய ப்புலனாய்வுத் துறையினரின் ஆத்திரம் இன்று ஏற்பட்டதல்ல. அது எண்பதுகளின் ஆரம்பத்திலேயே- தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியா தனது நலனுக்குப் பயன்படுத்த முற்பட்டதை தலைவர் பிரபாகரன் ஏற்க மறுத்த போதே, அதாவது இந்தியாவின் கைப்பொம்மையாகத் தலைவர் பிரபாகரன் செயற்பட மறுத்த போதே- இவ்விரோதம் ஆரம்பித்து விட்டதெனலாம்.

ஆனால், அதன் பின்னர் இந்திய-சிறிலங்கா சமாதான உடன்படிக்கை மூலம் இலங்கை வந்த இந்திய இராணுவத்திற்கு எதிராக, விடுதலைப்புலிகள் போராடத் தொடங்கியதும், தலைவர் பிரபாகரனை எவ்வாறேனும் கொலை செய்துவிடுவதென்ற முடிவுடன் 'றோ' அமைப்பு தீவிரமாகச் செயற்படவும் தொடங்கியது. இதற்காக அது பல முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டதோடு பல இராணுவ நடவடிக்கைகள் கூட எடுக்கப்பட்டன.

ஆனால் போரில் தோற்று இந்திய இராணுவம் வெளியேற வேண்டி வந்த நிலையிலும், 'றோ' தனது முயற்சிகளை கைவிடவில்லை என்பதைத் தற்போதைய தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. 'றோ'வின் இவ்வாறான முயற்சிக்கு அதற்குப் பின்னர் நடைபெற்ற சில சம்பவங்களும் காரணமாக கூறப்படினும், உண்மையில் தலைவர் பிரபாகரனின் மீது 'றோ'விற்கு உள்ள ஆத்திரம் என்பது இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கையை அதாவது இந்தியாவின் ஏகாதிபத்தியக் கொள்கையைத் தோற்கடித்ததினால் எழுந்ததே ஆகும்.

அதிலும் குறிப்பாக இந்திய - சிறிலங்கா சமாதான உடன்பாட்டைத் தோல்வியுறச்செய்தமையாகும். இவ்வுடன்பாடானது அரங்கேறுவதிலும், அத்தோடு இலங்கையில் இந்திய இராணுவத்தை இறக்கியதிலும் றோவிற்குக் கணிசமான பங்கு உண்டு. புலிகளுக்கு எதிரான போரிலும் 'றோ'வின் ஆலோசனையின் பேரிலேயே இந்திய இராணுவம் இயங்கியது. இந்நிலையில் ஒப்பந்த தோல்வி என்பது 'றோ'வின் தனிப்பட்ட தோல்வி என்றே கொள்ள முடியும்.

# பூநகரியில் இராணுவத்தினருக்கு தோல்வி; பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

### முன்னாள் தளபதி சிசில் வைத்தியரட்ணாவின் அறிக்கை

பூநகரி இராணுவமுகாமின் தலைமையகம் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருக்கவில்லை. அங்கிருந்த அதிகாரிகள் தமது வசதிக்கேற்ப தலைமையகத்தை அமைந்திருந்தனரேயன்றி பாதுகாப்பு நோக்கத்திலன்று. இவ்வாறு பூநகரி இராணுவமுகாம் மீதான புலிகளின் தாக்குதல் பற்றி அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா எழுதியுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். கவனக்குறைவாகவும், சிரத்தையின்றியும் கடமையில் இருந்ததாக மூத்த இராணுவ அதிகாரி ஒருவரைக் குற்றம்சாட்டி அவர் எழுதியுள்ள இவ் அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

பூநகரி இராணுவமுகாம் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதல் பற்றி ஆராய பிரிகேடியர் ரி. என். டி சில்வா தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை டிசம்பர் 29, 1993-ல் கிடைக்கப்பெற்றது. இதில் சில அவதானிப்புக்களும், மேலதிக குறிப்புகளும், கருத்துக்களும், சிபார்சுகளும் இடம்பெற்றிருந்ததுடன் கவனக்குறைவாக இருந்தமை பற்றிய குற்றச்சாட்டும் இடம் பெற்றிருந்தது.

பூநகரி இராணுவமுகாமின் முன்னணிப்பாதுகாப்புஅரணுக்குள் மக்கள் வாழ அனுமதிக்கப்பட்டமை விடுதலைப் புலிகள் ஊடுருவுவதற்கு வாய்ப்பாக இருந்துள்ளது.

தாக்குதல் பற்றி முன்னெச்சரிக்கைகள் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் கனரக ஆயுதப்படைகளின் பொறுப்பதிகாரி விடுப்பில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

தரைக்கும், கடற்படைக் கலங்களுக்கும் இடையிலான தொலைத்தொடர்பு மிகப் பலவீனமாக இருந்துள்ளது.

இதற்கு பாவிக்கக்கூடிய மின்கலங்கள் இல்லாமையும், பொருத்தமான மாற்றுவழிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்காமையும் காரணமாகும்

மூத்த அதிகாரிகளின் உத்தியோகபூர்வ விஜயங்கள் மிகக் குறைவாகவே இருந்துள்ளது. அத்துடன் அவையும் நீண்ட கால இடைவெளிகள் கொண்டதாக இருந்திருக்கிறது.

ரி.55ரக டாங்கிகளுக்கான பாதுகாப்பை படைப்பிரிவின் தளபதிஉறுதிப்படுத்தி இருக்கவில்லை.

புதிய படைப்பிரிவிற்கான ரவைகள் போதுமானதாக இருக்கவில்லை. அத்துடன் இவை படையின் தளபதியால் சீரமைக்கப் பட்டிருக்கவும் இல்லை.

அச்சுறுத்தல்கள் இருப்பது பற்றித் தெரிந்திருந்தபோதும் பிரிகேடியர் நம்முனி முன்னணிப்பாதுகாப்பு அரண்களை மாற்றியமைக்கவில்லை.

பின்புறத்திலிருந்து தாக்குதல் நடத்தப்படும் சாத்தியப்பாடு காணப்பட்டபோதும் அதனை எதிர்த்து சமாளிக்க போதிய முன் ஆயத்தம் செய்யப்படவில்லை.

கனரக ஆயுதங்களுடன் நிலை எடுத்திருந்த படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதும் அவர்கள் உயிர்ப்பாதுகாப்பு கருதி ஆயுதங்களைக் கைவிட்டனர். பல சந்தர்ப்பங்களிலும்சிறப்பான ஆயுதங்கள் விடுதலைப்புலிகளிடம் கிட்டுவதற்கு இது வாய்ப்பளித்தது. புலிகளின் துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்புவதற்கு அவசரம் காட்டியதால் இது நிகழ்ந்துள்ளது

காயம்பட்டவர்கள் தமது அணியிலிருந்து தாமாகத் துண்டித்துக்கொண்டு தாமாகவே முடிவுகளை எடுத்துக் செயற்பட்டனர். அவர்களுக்கு உடனடி அவசர அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை. இராணுவத்தினர் பின்வாங்கும் வழிகள் தாக்குதலுக்கு இலக்கானதையடுத்தே தலைமையகத்தைக் காப்பதற்கான தாக்குதல் இராணுவ தரப்பில் தீவிரமாகியது.

துருப்புகள் மத்தியில் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக கட்டுப்பாடுகளோ, ஒழுங்குகளோ காணப்படவில்லை.

நள்ளிரவுக்கு சற்று முன்பாக தாக்குதல் ஆரம்பித்து விட்டபோதும்கூட டாங்கிகளுக்குப் பொறுப்பான அதிகாரி அதிகாலை 1.30 வரை தூக்கத்திலேயே இருந்திருக்கிறார்.

விமானப்படை விமானங்கள் தாக்குதலில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான கால நிலை இருக்கவில்லை.

சிறிலங்கா காலாட்படையில் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரியாக இருந்த கேணல் டி.டி.ஆர். டி. சில்வா போதுமான விழிப்புடன் செயற்பட்டு இருக்கவில்லை.

காயம்பட்ட தமது அணியினர் புலிகளிடம் சிக்கவிடப்படுவதில் படையினர் எதுவித தயக்கமும் காட்டவில்லை. புலிகளிடம் சிக்கிக் கொள்ள நேர்ந்தால் உடலைச் சிதறடித்து செத்துப் போகும்படி கைக்குண்டுகள் வழங்கப்பட்டன.

இவை அனைத்திற்கும் மேலாக முன்னணிப் பாதுகாப்பு அரண்களுக்கு இடையிலான இடைவெளி பெரும் அளவினதாக இருந்திருக்கிறது. இவ்விடைவெளி கண்ணிவெடிகளாலோ மிதிவெடிகளாலோ நிரப்பப்பட்டிருக்கவில்லை. இது விடயத்தில் முன்னணிப்பாதுகாப்பு அரண்களை மறுசீரமைத்து செயற்படுவதில் பிரிகேடியர் நம்முனி கவனம் எடுக்கவில்லை.

இராணுவ புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் பிரிகேடியர் பாலகல்ல 1993 ஜனவரி முதல் பூநகரி முகாம் மீதான தாக்குதல் குறித்து பலமுறை எச்சரித்துள்ளார். இது போல வேறு பல முகாம்களும் தாக்கப்படலாம் என அவ்வப்போது எச்சரிக்கை விடுத்து வந்தார். இது நேர் எதிர்மாறான விளைவை ஏற்படுத்தி விட்டது. முந்திய எச்சரிக்கைகள் ஒவ்வொன்றும் செயலாகாத போது இந்த எச்சரிக்கைக் குறிப்பு உசார்படுத்துவதற்கான ஒரு தந்திரம் என்றே படையினரில் பலரும் நம்பிவிட்டனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய நீதிமன்றம் பின்வருமாறு கருத்துக் கூறியுள்ளது.

கட்டளை பிறப்பிக்கும் அதிகாரியிலிருந்து முன்னணிப் படையினர் வரை அனைவரும் கவனக் குறைவாக இருந்தமையேபூநகரியில் தோல்வி ஏற்படுவதற்கு காரணம்.

முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் பாதுகாப்பு துறையின் அடிப்படைத் தத்துவங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்கவில்லை.

பாதுகாப்பு அரண்களை மறுசீரமைத்து துருப்புக்களின் இலகு நடமாட்டத்திற்கு வழி செய்யப்பட்டிருக்கவில்லை.

எதிரிகளிடமிருந்து தாக்குதல் நடத்தப்படும் போது அதனைச் சமாளிக்கும் வகையில் இரண்டு அல்லது மூன்று திசைகளில் தாக்குதல் நடத்தும் அளவுக்கு படையினர் அறிவுறுத்தப்படவில்லை.

விமானப்படை, கடற்படை என்பவற்றுடன் தொடர்பு கொண்டு மேலதிக . துருப்பினரை வரவழைப்பதற்கான திட்டம் எதுவும்வகுக்கப்பட்டு இருக்கவில்லை.

துருப்பினர் முன்னரே திட்டமிடப்பட்டு, நெருக்கமாக கண்காணிக்கப்பட்டு சரியான முறையில் குறிக்கோள் தெளிவுபடுத்தப்பட்டு, சிறந்த தலைமைத்துவம் வழங்கப்பட்டு, சரியான முறையில் பயிற்சியும், கட்டுப்பாடும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதில் இராணுவ தலைமைப்பீடம் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். எனவும் தெரிவித்து இருந்தது.

மேஜர் ஜெனரல், ஆர், டி எஸ். தளுவத்த முதல் பிரிகேடியர் ஜே. நம்முனி, பிரிகேடியர்கள் ஜி. பி. குலதுங்க எஸ். எச். எஸ். கொட்டேகொட, எல். பி. பாலகல, உட்பட பல அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியுள்ள ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா இது தொடர்பான நீதி மன்ற விசாரணைகளில் அவர்கள் ஒவ்வொருவரும் இழைத்திருந்த தவறுகள் பற்றியும் தனித்தனியாகச் சுட்டிக் காட்டி இருக்கின்றார். அத்துடன் இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் உடனடியாக பதவியிலிருந்து விலக்கப்படடு தண்டனைக்கு இலக்காக்கப் படவேண்டும் எனவும் அவர் இராணுவத் தளபதி என்ற வகையில் சிபார்சு செய்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

பூநகரி சம்பவம் தொடர்பாக விசாரணைக்குழுவால் பின்வருவோர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். கப்டன்கள் டி. ரி. பி. கே. பெரேரா, ஐ எம். கே. டிவாக், ரி. ஆர். ஹிவாக், டபிள்யூ. டபிள்யூ. எஸ். எல். பெர்னான்டோ, ஜி. பி. ஜி. பிரியந்தா, டபிள்யூ. ஜே. பி. எஸ். சொய்சா, கே. ரி. எஸ். பெரேரா, எச். எம். ரி. பி. ஹங்கிபொல, டபிள்யூ. எம். எம். ஜே. கே. கே. சேனாரட்ன, என். யூ. சில்வா, எச். ஆர். என். பெர்னான்டோ, லெப். கே. பி. எஸ். ஏ. பெர்னான்டோ, 2ஆம் லெப். எஸ். டி. ஜெயகொடி, கப்டன்கள் சுமிந் பிரேம்லால், ஜெயதுங்க, லெப். கேணல் எஸ். டபிள்யூ. எல். தவுலுகல, பிரிகேடியர் கொத்தேகொட, பிரிகேடியர் ஜி. பி. குலதுங்க, பிரிகேடியர் ஜே. நமுனு, மேஜர் ஜெனரல் தளுவத்த.

சட்டமாஅதிபரின் கடிதத்தின் பின்பும்

## சிறையில் இருக்கும் தமிழர்கள்

ஐ. தே. க. தலைமைப்பீடத்திடம்

## கிழக்கு முஸ்லிம் ஒருவரை

குக் கணிசமான பங்கு உண்டு. புலிகளுக்கு எதிரான போரிலும் 'றோ'வின் ஆலோசனையின் பேரிலேயே இந்திய இராணுவம் இயங்கியது. இந்நிலையில் ஒப்பந்த தோல்வி என்பது 'றோ'வின் தனிப்பட்ட தோல்வி என்றே கொள்ள முடியும்.

ஆனால் தலைவர் பிரபாகரனைக் கொலை செய்வது என்பது தனிப்பட்ட நபர் ஒருவரைக் கொல்வதாக இந்திய தரப்பிலோ, அதன் புலனாய்வுத்துறை தரப்பிலோ கருதப்படவில்லை என்பதும் திண்ணம். அவ்வாறு யாரும் கருதியிருந்தால் அது அரசியலில் அவர்களின் அப்பாவித்தனத்தைக் வெளிக்காட்டுவதாகவே இருக்கும்.

தலைவர் பிரபாகரன் தமிழீழ மக்களின் தேசியத் தலைவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அச்சாணியாக இருப்பவரும் அவரே. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகள், துன்பங்கள், சவால்கள், அச்சுறுத்தல்கள் என்பனவற்றையும் கடந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர். இன்று உலகில் ஆயுதப்போராட்டத்தை நடத்தும் அமைப்புக்களில் செயற்பாடு மிக்க தலைவர் என்றும், ஆயுதப் போராட்டத்தில் புதிய பாணியை வளர்த்துக் கொண்டவர் எனப் பெயர் பெற்றவர்.

இந்த வகையில் பிரபாகரன் என்பது தனிப்பட்ட ஒரு நபருடைய பெயர் அல்ல. அது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சின்னம். இதேசமயம் இவரின் தலைமையின் கீழ், நடைபெற்று வரும் தமிழர் தேசிய இனப் போராட்டத்தின் எழுச்சியானது தென்னாசியாவில் ஒடுக்கப்படும் இனங்களுக்கு புது நம்பிக்கையையும், உத்வேகத்தையும் கொடுத்துள்ளது. இது இந்திய அரசாங்கத்தைப் பொறுத்து ஜீரணிக்கக் கூடியதோ, ஏற்றுக் கொள்ளக் கூடியதோ அல்ல. இந்திய ஏகாதிபத்தியத்திற்கு சவால்விடும் இவ் எழுச்சியானது இந்திய அதிகார வர்க்கத்திற்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதிலும் வியப்பில்லை.

இந்த நிலையில் தலைவர் பிரபாகரனை கொலை செய்தல் என்பது தனிப்பட்ட நபர் ஒருவர் மீதுள்ள கோபத்தைத் தீர்த்துக் கொள்ளும் முயற்சியல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தோற்கடிப்பதற்கான முழு அளவினதான முயற்சி ஆகும். அதாவது தலைவர் பிரபாகரனே தமிழீழ போராட்டத்தின் மையம் என்பதை திட்டவட்டமாக 'றோ' புரிந்து கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்தியாவின் நோக்கமானது தலைவர் பிரபாகரனைக் கொலை செய்வதன் மூலம் தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை தோற்கடிப்பதும், இந்திய வல்லாதிக்கத்தை இலங்கையில் படர விடுவதுமாகும். ஆகையினால், தலைவர் பிரபாகரன் மீது 'றோ' வைத்துள்ள குறியானது, இலங்கைத்தமிழ் மக்களின் உரிமைக்கும், பாதுகாப்பிற்கும் எதிரான குறியே ஆகும். இது குறித்து தமிழ் மக்கள் எப்பொழுதும் விழிப்பாகவே இருத்தல் வேண்டும்.

சட்டமாஅதிபரின் கடிதத்தின் பின்பும்

# சிறையில் இருக்கும் தமிழர்கள் விடுதலை செய்யப்படவில்லை

## சட்டத்தரணி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறையில் வாடும் தமிழர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் கடிதம் அனுப்பி ஒருமாதமாகியும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

கொம்மாந்துறை இராணுவத்தினரால் 21. 12. 92இல் சந்தேகத்தின் பேரில் கைதானவர் அருணகிரியோகநாதன் இவர் மீது வழக்கு இல்லை இதனால் விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் கடந்த மாதம் ஏழாம் திகதி சி. ஐ. டியினருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் கடிதம் அனுப்பியிருந்தார்.

மண்முனை அதிரடிப்படையினரால் 7-12-93 இல் கைதானவர் நல்லதம்பி செல்வராஜா கொழும்பு பிரதம நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர். இவரை விடுதலை செய்ய செப்டம்பர் 30ம் திகதி சட்டமா அதிபர் சிபார்சு செய்திருந்தார்.

கதிரமலை விஜயகுமார் 28.7.93 இல் சி.ஐ.டி பொலிசாரால் கைதானவர் கோட்டை நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட இவரை கடந்த மாதம் 7-ம் திகதி விடுதலை செய்ய சட்டமா அதிபர் சிபார்சு செய்திருந்தார்.

முருகுப்பிள்ளை சொக்கலிங்கம் 2.8.93 இல் திருக்கோவில் அதிரடிப்படையினரால் கைதானவர். பிரதம நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர். கடந்த மாதம் 7-ம் திகதி விடுதலை செய்ய சட்டமா அதிபரால் சிபார்சு செய்யப்பட்டவர்

மேற்படி நால்வரும் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. மகசீன் சிறையில் உள்ள நான்கு தமிழ்க் கைதிகளின் விரைவான விடுதலைக்கு உதவுமாறு குற்றப்புலனாய்வுத்துறையினரை சட்டத்தரணி கேட்டுள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 12 - 01**
**வியாழன் இரவு**

08.01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
08.10 - சித்த மருத்துவ குறிப்புகள் - இருதய நோய்க்கான மருத்துவம்
08.20 - உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''குந்தியிருந்ததுபோதும்'' - குறுநாடகம்
08.30 - செய்திகள்
08.40 - ஏட்டிலிருந்து - எரித்திரியா ஒரு நாட்டின் உதயம் என்ற நூலிலிருந்து ''சுதந்திரத்திற்கான நீண்ட போராட்டம்'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
08.50 - மலரும் மொட்டுக்கள்
09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994 - 12 - 02**
**வெள்ளி காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - மணியாரம்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப்பாடல்கள்
08.00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

தமிழ்மொழி மூல டிப்புளோமா

# திறந்தபல்கலைக்கழகத்தில் திட்டமிட்டு புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை திறந்த பல்கலைக்கழகங்களில் முகாமைத்துவ டிப்புளோமா கற்கை நெறிகளுக்கு சிங்களம், ஆங்கில மொழிகளில் விளம்பரப் படுத்தப்பட்டுள்ள அதே வேளை தமிழ் மொழி மூலமான கற்கை நெறி புறக்கணிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஐ. தே. க. எம். பி. அஷ்வர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆங்கிலம், சிங்களம் மூலம் மட்டும் முகாமைத்துவ கற்கைநெறி ஆரம்பிக்கப்படுவதால் பெருமளவிலான தமிழ் மாணவர்கள் இம் முகாமைத்துவ கற்கை நெறியை இழக்கும் நிலை ஏற்படும். இதனால் இதைத்தவிர்ப்பதற்காக தமிழ் மூலம் விளம்பரம் செய்தால் தவறா என கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரானவைக் கேட்டுள்ளார்.

ஐ. தே. க. தலைமைப்பீடத்திடம்

# கிழக்கு முஸ்லிம் ஒருவரை பா.உ. ஆக்க வேண்டுகோள்

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற அங்கத்துவம் பெற்ற டாக்டர் காமினி விஜேசேகர, ஜி.எம்.பிரேமச்சந்திரா ஆகியோர் பாலத்துறை குண்டுவெடிப்பில் கொலையுண்டதை தொடர்ந்து இவ் இரண்டு ஆசனங்களுக்கும் வெற்றிடம் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்த வெற்றிடங்களில் ஒன்றையேனும் கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு அளிக்க வேண்டுமென்று ஐ.தே.க தலைமைப் பீடத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இதே வேளை ஐ.தே.கவின் தொழில் சங்கப் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்த நியமனங்கள் தொடர்பாக ஐ.தே.கவின் தேசிய செயற்குழு எந்த முடிவையும் இன்னமும் எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

மேலும் குண்டு வெடிப்பால் படுகாய முற்று பின் மருத்துவமனையில் காலமான கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஓஸி அபயகுணசேகராவின் ஆசனமும் காலியாக இருப்பது தெரிந்ததே.

# நிர்வாகசேவைவிண்ணப்பம் முடிவுதிகதி மேலும்நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என பொது நிர்வாக, பெருந்தோட்டத்துறை பாராளுமன்ற விவகார அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

வடபகுதியைச் சேர்ந்த இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதி வாய்ந்தவர்கள் பத்திரிகைகள் உரிய காலத்தில் கிடைக்காததால் விண்ணப்பிக்க முடியாத நிலையை சுட்டிக்காட்டி விண்ணப்பத் திகதியை நீடிக்குமாறு கேட்கப்பட்டதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# எயிட்ஸ்நோய்கிருமியுடன் பிறக்கும் குழந்தைகள்

எயிட்ஸ் நோயைக் கொண்டு எச். ஐ. வி வைரஸ் கிருமிகளுடன் குழந்தைகள் பிறப்பது இலங்கையிலும் ஆரம்பித்து இருக்கின்றது. இவ்வாறு உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ் மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியின் அடிப்படை நகர்ப்புற சேவைகள் நிகழ்ச்சித் திட்டம் வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்படுகையில் இலங்கையில் தற்சமயம் 6000 பேர் எயிட்ஸ் நோயின் பாதிப்புக்கு இலக்காகியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இவர்களில் சுமார் 130 பேர் எயிட்ஸ் நோயாளிகளாகவே மாறிவிட்டனர். ஏனையோர் பத்துவருடங்களுக்குள் நோயாளிகளாக மாறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவக் கட்டமைப்பு மாற்றம் விரைவில் ஏற்பட வாய்ப்பில்லை

## சிரேஷ்ட அதிகாரிகளுக்கு சேவைக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா பொலிஸ் மா அதிபர் பிராங்டி சில்வா ஆகியோரது சேவைக்காலம் மேலும் நீடிக்கப்பட்டமைக்கு அரசு மீண்டும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்க எடுத்த முயற்சிகளே காரணம் என ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசின் சமாதான முயற்சிகளுக்கு எந்தவிதமான ஆதரவையும் தாம் தரத் தயாராக இருப்பதாக ஹமில்டன் வணசிங்க அரசுக்கு உறுதியளித்துள்ளார்.

இதே சமயம் பாதுகாப்பு அமைச்சின் செயலராக இனி வருங்காலத்தில் சிவில் அதிகாரியே நியமிக்கப்படவேண்டும் என்ற ஆலோசனை அரச உயர் மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என இராணுவ வட்டாரங்கள் கூறியதாகவும் ஐலண்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

முன்னர் எதிர்பார்க்கப்பட்டபடி இராணுவ கட்டமைப்பிலும் பாரிய மாற்றங்கள் இப்போது மேற்கொள்ளப் படமாட்டாது எனவும் சமாதானப்பேச்சுகளை தொடர அரசு முடிவு எடுத்தாலும் திட்டமிட்டபடி படையினருக்கான ஆயுதக் கொள்வனவு தொடரும் எனவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

# இழுவைப் படகுகள் சேதம்; பொருட்கள் இறக்குதலில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கி கரைசேர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் இழுவைப் படகுகள் அனைத்தும் பழுதடைந்துள்ளன. இப்பழுதடைந்த இழுவைப்படகுகளில் இரண்டே தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது பருத்தித்துறை இறங்குதுறைக்கு பொருள்களுடன் வந்து சேர்ந்துள்ள குமண, மாகோ கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் இதனால் பாதிப்படைந்துள்ளன.

சுமார் மூன்று ஆண்டு காலமாக ஐந்து இழுவைப்படகுகளே பொருள்களை ஏற்றி கரைசேர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது இவற்றில் ஒன்று கரையில் இழுத்து வைக்கப்பட்டுள்ளது. இன்னொன்று கரையில் நீரில் அமிழ்ந்து உபயோகிக்கப்படாத நிலையில் உள்ளது. வேறொன்று பழுதடைந்த நிலையில் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

மீதி இரண்டு இழுவைப் படகுகள் மட்டும் சிறிய தொகை பொருள்கள் ஏற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவையும் நல்ல நிலையில் இயங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, கடலில் கொந்தளிப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் கப்பல்களிலிருந்து பொருள்கள் ஏற்றும் வேலைகள் தாமதமடைந்துள்ளன.

வழமையாக நாளொன்றிற்கு பத்திலிருந்து பதினைந்து தடவைகள் இழுவைப்படகு மூலம் பொருள்கள் இறக்கப்படும். தற்போது இரு இழுவைப்படகுகள் மூலமும் நான்கு தடவைகளே பொருள்கள் ஏற்றி இறக்கும் வேலைகள் நடைபெறுகின்றன.

இதே சமயம் இன்று கோமாரி கப்பல் பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன என புனர்வாழ்வுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். இம்மக்களுக்குரிய பத்து வாரங்களுக்கான நிவாரணப் பொருள்கள் வழங்கப் படவுள்ளன. (தி) (இ)

# யாழ். மாவட்ட விளையாட்டு பரிசளிப்பு விழா இன்று

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழுவினால் 1994-ம் ஆண்டில் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட அனைத்து விளையாட்டுப் போட்டிகளுக்குமான பரிசளிப்பு விழா இன்று பகல் 1.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு விளையாட்டிலும் மாவட்ட அடிப்படையில் முதலாவது இடத்தைப் பெற்ற அணிகளுக்கும், வீரர்களுக்குமான வெற்றிக்கிண்ணங்கள் தமிழீழ மாவீரர்கள் நினைவாக வழங்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் போரில் முதற் களப்பலியான விடுதலைப் புலிகள் இயக்க வீரர் லெப்டினன்ட் சத்தியநாதன், கப்டன் பண்டிதர், லெப். கேணல் பொன்னம்மான், லெப். கேணல் இம்ரான், லெப். கேணல் பாண்டியன், லெப். கேணல் ராஜன், லெப். கேணல் சாள்ஸ், லெப். கேணல் குணா, லெப். கேணல் சூட், மேஜர் முரளி ராஜேந்தர், லெப். கேணல் ஜோய், லெப். கேணல் றீகன், 2ஆம் லெப். மாலதி, மேஜர் சோதியா, கப்டன் வானதி, மேஜர் பாரதி, மேஜர் சுகன்யா, மேஜர் யாழிசை, கப்டன் அமுதினி, லெப். கேணல் பாமா, ஆகிய மாவீரர்கள் நினைவாக வெற்றிச் சுற்றுக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன. இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன.

### ஒளி விழா

கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தின் வருடாந்த ஒளி விழா நிகழ்வு நாளைகாலை 10.30 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். கிறிஸ்தவ மன்றத் தலைவர் செல்வன் பி. அலோன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக அருட்தந்தை ச. எட்மன்ட் றேஜினோல்ட் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராகக் கல்லூரி அதிபர் திரு.வி. மாணிக்கம் கலந்து கொள்கின்றார். விழாவில் மாணவரின் பாடல்கள், தாளலயம், நாடகம் முதலியன சிறப்பம்சங்களாக இடம் பெறுகின்றன. இந் நிகழ்வை மன்றப் பொறுப்பாளர் திருமதி எம். எப். எல். விக்டோரியா சிறப்புற நடாத்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

## இன்று தபால் விநியோகம்

யாழ். மாவட்ட தபாலகங்களுக்கு 'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட 315 தபால் பொதிகளும் நேற்று பிற்பகல் கப்பலில் இருந்து இறக்கப் பட்டுபிரதான தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

இத் தபால்கள் இன்று (வியாழன்) முதல் விநியோகம் செய்து வைக்கப்படுமென்றும் வெளிநாட்டுத்தபால்களும் வந்துள்ளதாகவும் யாழ். பிரதான தபாலதிபர் திரு. கோடீஸ்வரன் செய்தியாளருக்கு தெரிவித்தார்.

## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

இளம் குடும்பப் பெண் ஒருவர் ஆனைக்கோட்டைப் பகுதியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கமலாதேவி வயது 20 என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார். இவரிற்கு ஆறுமாத கைக் குழந்தை ஒன்று இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது உடல் காவல் துறையினரால் நேற்று பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ)

## புதிய பதவியில் நெலும் கமகே

(கொழும்பு)

லஞ்ச ஆணையாளராக கடமையாற்றி பதவி விலகும் திருமதி நெலும் கமகேவுக்கு புதிய பதவி வழங்கப்படவுள்ளது.

சந்திரிகாவின் தேர்தல் வெற்றி;

# ஆட்சேபனைமனுதிட்டத்தை ஐ.தே.க. கைவிட்டது

(கொழும்பு)

திருமதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியமை குறித்து ஆட்சேபமனுவொன்றை சமர்ப்பிப்பதென எடுக்கப்பட்ட தனது முன்னைய தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி நிர்வாக முறையை நீக்குவதாகபொது ஜன ஐக்கிய முன்னணி உறுதி கூறியிருப்பதும் அவ்வாறு ஜனாதிபதி நிர்வாக முறை நீக்கப்படவிருக்கும் கால எல்லையையும் கருத்தில் கொண்டு ஐ.தே.க இந்த முடிவுக்கு வந்துள்ளதாக அதன் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### ஆனைப்பந்தி

ட்டம் ஆனைப்பந்தி மெ. மி. த. க வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜோ. சிவராமசர்மா 500க்கு 476 புள்ளியையும், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையைச் சேர்ந்த துரைராஜா இரஜீவன் 471 புள்ளிகளையும், யாழ் இந்து ஆரம்

இராணுவ

நிவாரண கூட வழக்கைகளை சீராக்க

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வெற்றிவேலு அருளம்மா

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த திருமதி வெற்றிவேலு அருளம்மா சென்ற சனிக்கிழமை (26-11-94) லண்டனில் காலமானார். அன்னார் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை வெற்றிவேலுவின் அருமை மனைவியும், காலஞ்சென்ற ஓவசியர் பொன்னம்பலத்தின் அருமை மகளும், திருமதி சதாசிவம் சிவக்கொழுந்து(லண்டன்), காந்தி (சாந்திகம், யாழ்ப்பாணம்), கதிரவேலு அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நயினாதீவைச் சேர்ந்த இராமநாதன் சதாசிவம் (பொறியியலாளர், லண்டன்), திருமதி காந்திமதி, திருமதி சந்திரலேகா (அவுஸ்திரேலியா), அவர்களின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற திருமதி நாகராசா சரஸ்வதி, கணேசரத்தினம் (கனடா), சண்முகரத்தினம் (சம்பியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், தேவாம்பிகை, தேவக்குமரன் (லண்டன்), கஜன், பிரியதர்சினி, கீதாஞ்சனா, கிரிஷாந்த், சிவாஞ்சனா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

43, செட்டித்தெரு,<br>நல்லூர்,<br>யாழ்ப்பாணம். (10251)

தகவல்:<br>வெ. காந்தி<br>(மகன்)



## கதிரமலை கந்தசுவாமி

(கிராம உத்தியோகத்தர் வண். வடக்கு)

காரைநகர் சிவகாமி அம்பாள் வீதியை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கொக்குவிலை வதிவிடமாகக் கொண்டவருமான கதிரமலை கந்தசுவாமி அவர்கள் 29-11-94 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தி. கதிரமலை, க. சவுந்தரம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், கமலாம்பிகை (மருந்தாளர், யாழ். அரசினர் வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும், கமலவதனி, திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமாரின் (டென்மார்க்) அன்பு மாமனும், நாகேந்திரம் (மகாலஷ்மி ஸ்ரோர்ஸ் செங்கலடி), ஜெகதீசன் (கிராம உத்தியோகத்தர், சங்கானை கிழக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மு. அம்பலம், அ. பாக்கியம் ஆகியோரின் மருமகனும், நா. ஜெயலட்சுமி, ஜெ. விமலாதேவி (ஆசிரியை, காரைநகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

கொக்குவில் மேற்கு, க. ஜெகதீசன்

ராஜா இராஜவேல் 471 புள்ளி களையும், யாழ் இந்து ஆரம் பப்பாடசாலையைச் சேர்ந்த இ. கேதாரசர்மா 466 புள்ளி களையும் பெற்று முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங் களைப் பெற்றுள்ளனர்.

நான்காவது இடத்தை உடுவில் மகளிர் கல்லூரி, புனித பரியோவான் கல்லூரி, யாழ் இந்து ஆரம்பப்பாடசா லைகளைச் சேர்ந்த மாணவர் கள் பெறுகின்றனர்.

தேர்வு பற்றிய முழுமை யான செய்திகள் நாளை வெளிவரும்.

### இராணுவ

வெருகல் மாவீரர் துயிலும் இல்லத்தை 26-ந் திகதி காலை 5 மணியளவில் சுற்றி வளைத்த இராணுவத்தினர் மக்களை துன்புறுத்தியதோடு செய்யப்பட்டிருந்த அலங் காரங்களையும் அழித்தனர்.

ஆனால், இராணுவத்தினர் அப் பகுதியை விட்டுச் சென்ற தும் மக்கள் மீண்டும் அலங் காரங்களைச்செய்து மாவீரர் தினத்தை உணர்வுபூர்வமாக கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.


## இப்பொழுதுகாண்பிக்கப்படுகின்றது

யாழ். **ஸ்ரீதர்** அகலத்திரையில்

தினசரி பிற்பகல்: 2. 30, 4. 30, 6. 30.

சனி, ஞாயிறு காலை 10.30, பி.ப. 2.30,4.30, 6.30

விடுதலைப் புலிகளின்
கலை பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து
திரைப்படப் பிரிவின் தயாரிப்பில்

உருவாகிய
ந. கேசவராஜனின்

# "பிஞ்சு மனம்"

(வர்ண முழு நீள படம்)

திரைப்பட பிரியர்களுக்கு மற்றுமோர் அரிய திரை விருந்து 'பிஞ்சு மனம்'!

தமிழீழ திரைவானில் உலாவி வருகின்றது 'பிஞ்சு மனம்'!

தமிழீழ மக்கள் பார்த்து மகிழ 'பிஞ்சு மனம்'!

(சி-10814)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01.ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# நிவாரண நடவடிக்கைகளை சீராக்க இணைப்பதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

நாட்டின் 14 மாவட்டங்க ளிலும் உள்ள 215 முகாம்க ளில் தங்கியிருக்கும் 16591 குடும்பங்களைச் சேர்ந்த சிங் கள, தமிழ், முஸ்லிம் அகதிக ளுக்கான நிவாரண நடவடி க்கைகளைச் சீராக்க 14 மாவ ட்ட இணைப்பதிகாரிகள், மூன்று மேற்பார்வையாளர் உட்பட 17 பேரை நியமிக்க மந்திரி சபை தீர்மானித்துள் ளது.

கப்பல்துறை, துறைமுகங் கள் புனர்வாழ்வு புனர் நிர் மாண அமைச்சர் எம்.எச் எம் அஷ்ரப்பின் சிபார்சின் பேரில் இந்த முடிவு எடுக்கப் பட்டதாக மந்திரிசபை பேச் சாளரான அமைச்சர் தர்ம சிறி சேன நாயக்க தெரிவித் துள்ளார்.

இந்த அகதிகளுக்கான நிவாரண உதவிகள் உரிய முறையில் மேற்கொள்ளப் படவில்லை என்றும் நிதிகள் மோசடி செய்யப்பட்டதாக வும் புகார்கள் தெரிவிக்கப்ப டுவதால் புனர்வாழ்வு மற் றும் நிவாரண நடவடிக்கை களை மேற்கொள்ள 14 இணைப்பதிகாரி களும் மூன்று மேற்பார்வையாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர் என அமைச்சர் தெரிவித்தார்.

# பெண்ணின் கடிதத்தால் இரு பொலிசார் பலி

பெண்ணொருவர் எழுதிய கடிதம் தொடர்பாக எழுந்த சர்ச்சையினால் இரண்டு பொலிசார் உயிரிழந்துள்ளனர்

வவுனியா நெலுக்குளம் பொலிஸ்காவலரணொன்றில் பெண்ணொருவர் எழுதிய கடிதமொன்றை காவலரணி லிருந்த பொலிசார் ஒருவர் வாசித்துக் கொண்டிருந்த போது, மற்றொரு பொலி சார் அதனைப் பறிக்க முயன் றார். இதனால் கோபமடை ந்த கடிதம் வைத்திருந்தவர் தனது துப்பாக்கியால் பறிக்க முயன்றவரை சுட்டார். பின் தன்னைத்தானே சுட்டு தனதுயிரையும் போக்கிக் கொண்டார்,

### யாழ்.

மான வளங்கள் இருந்தும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு மானியங்கள் ஆணைக்குழு வினால் ஒதுக்கப்படும் தொ கை ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாகவேயுள்ளது.

### ஜனாதிபதி

சுத் தலைவர்கள் மாநாட் டில் பங்கேற்கும் விதமாகவே இவர் புதுடில்லிக்கு செல்லத் திட்டமிட்டிருப்பதாகக் கூறப் படுகிறது.

### இன்று

எண்ணக் கருத்துடன் நட வடிக்கை எடுக்க நிறுவனம் ஆலோசனை வழங்குகின்றது.

உலகில் 17 மில்லியன் மக் கள் தற்போது எச். ஐ. வி. வைரசினால் பாதிக்கப்பட்டுள் ளனர். இலங்கையில் 6000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# லெப்.கேணல்ஜோய்நினைவு கலைஅரங்கு திறப்பு

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் ஜோயின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி புதிய கலை அரங்கு திறந்து வைக்கப்பட்டு நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது. நேற்று நாவாந்துறை ரீகன் நகரில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மக்களால் லெப். கேணல் ஜோயின் மூன்றாம் ஆண்டு நினைவுநாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட் டது.

இதில் மட்டக்களப்பு அம் பாறை மாவட்ட சிறப்புத் தளபதி தேசியக் கொடியை ஏற்றி வைத்து லெப். கேணல் ஜோயின் உருவப்படத் திற்கு மலர்மாலை அணிந் தார். தொடர்ந்து இவரால் கலை அரங்கு திறந்து வைக் கப்பட்டது.

இதை அடுத்து யோகன் பாதர் நினைவுரையை நிகழ்த் தினார். தொடர்ந்து பல கலைநிகழ்வுகள் இடம்பெற் றன. (இ)

# பயிலுனர் ஆசிரிய தெரிவு பரீட்சை இம்மாதஇறுதியில்

தமிழ் மொழி மூலம் பாட சாலைகளில் நிலவும் வெற்றி டங்களை நிரப்புவதற்காக பயிலுனர் ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கானபோட் டிப் பரீட்சை-இம்மாத இறுதி யில் நடைபெறும் என அறி விக்கப்பட்டுள்ளது.

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப் பங்கள் கடந்த மார்ச் மாதம் கோரப்பட்டிருந்தன.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
க. ஜெகதீசன்
(சகோதரன்)

(10249)

## திருமதி மாணிக்கம் சின்னம்மா

முருகேசு மாணிக்கத்தின் அன்பு மனைவி சின்னம்மா காலமாகிவிட்டார். அன்னார் சண்முகநாதன் (நில அளவையாளர் - கனடா) அவர்களின் அன்புத் தாயா ரும் சீதாலட்சுமியின் அன்பு மாமியாரும் ஜாழினி, ஜெனனி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 1-12-1994 வியாழக் கிழமை பி. ப. 2. 00 மணிக்கு தகனக்கிரியைக்காக புத்தூர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
முருகேசு மாணிக்கம்
(கணவர்)

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(10253)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

உதிப்பு:
24 - 04 - 1950

உதிர்வு:
01 - 12 - 1992



## திருமதி கமலாவதி வீரகத்தி

எம் இதயத்திலும் இல்லத்திலும் என்றும் குடி கொண்டிருந்த எங்கள் அன்புத் தெய்வமே எம்மைப் பிரிந்து இன்றுடன் ஆண்டுகள் இரண்டு மறைந்துவிட் டது ஆண்டுகள்பல சென்றாலும் தங்கள் அன்புமுகமும் நினைவுகளும் என்றும் எங்களை விட்டு அகலாதம்மா.

உங்கள் பிரிவால் வாடும்
**கணவன், பிள்ளைகள்.**

வேம்படி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

(10248)